பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 11 2025** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) காசநோய்க்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகள், குறிப்பிடத்தக்க வேகத்தை அடைந்துவருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை மூன்று சதவீதம் உயர்த்தி வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

3) காவிரி டெல்டா விவசாயிகளின் உரிமைகளை தமிழக அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காது என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

4) ஆம்னி பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5) ஆஸ்திரேலியா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — அமெரிக்காவின் **Reese Stalder** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>>

காசநோய்க்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகள், குறிப்பிடத்தக்க வேகத்தை அடைந்துவருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காசநோய் ஒழிப்பு தொடர்பான உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய அறிக்கையின் முக்கிய அம்சங்களை குறிப்பிட்டு சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் காசநோயாளிகளின் எண்ணிக்கை பாராட்டத்தக்க வகையில் குறைந்துள்ளதாக கூறியுள்ளார்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இந்தியாவில் காசநோய் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்த பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் தமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிகிச்சை முறைகள், நோய் ஒழிப்பில் தீவிரமான நடவடிக்கை போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள், ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இம்மாதம் 4-ஆம் தேதி

தொடங்கியதிலிருந்து, இதுவரை 42 கோடி விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் 4-ஆம் தேதிவரை இந்த பணிகள் நடைபெறும்.

இந்நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாவட்ட ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte — மாவட்ட ஆட்சியர் — 46 Sec. )*

<<<<<<<<>>>>>>>

தமிழக அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி மூன்று சதவீதம் உயர்த்தி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மத்திய அரசு அறிவித்துள்ள அகவிலைப்படிக்கு இணையாக, 55 சதவீதத்தில் இருந்து 58 சதவீதமாக இது உயர்த்தி வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த அகவிலைப்படி உயர்வு, கடந்த ஜூலை ஒன்றாம் தேதிமுதல் வழக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயனடைவார்கள் என்றும்,

அரசுக்கு ஆண்டுக்கு ஆயிரத்து **829** கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>

மேதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டதாக வெளிவரும் தகவலில் உண்மை இல்லை என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேகதாது அணை விவகாரத்தில், உச்சநீதிமன்றத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் தமிழக அரசின் சார்பில் எதிர்ப்பு தெரிவித்து, மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேகதாது அணை தொடர்பாக, தமிழக அரசின் கருத்துக்களை கேட்காமல் எந்தவொரு முடிவும் எடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்திடமும், மத்திய நீர்வள குழுமத்திடமும் தமிழக அரசின் சார்பில் வலுவான வாதங்கள் முன்வைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்காது என்றும் திரு துரைமுருகன் உறுதியளித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

இதனிடையே, மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க உச்சநீதிமன்றம் அனுமதி அளித்திருப்பது அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தை பாலைவனமாக்கும் கர்நாடக அரசின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் கடுமையான வாதங்களை முன்வைக்காமல், இந்த தீர்ப்புக்கு வழிவகுத்த திமுக அரசுக்கு தமது கண்டனத்தை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

காவிரியில் தமிழகத்தின் உரிமையை மீட்க உரிய நடவடிக்கையை திமுக அரசு எடுக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

ஆம்னி பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழகத்திலிருந்து, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு இயக்கப்பட்ட தனியார் ஆம்னி பேருந்துகளுக்கு அதிக அளவில் அம்மாநில அரசுகள் அபராதம் விதித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்காரணமாக, ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கடந்த நான்கு நாட்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், மாநில அரசு இந்த பிரச்சினையை தீர்க்க முன்வரவில்லை என்று அவர் குறை கூறியுள்ளார்.

இனியும், காலம் தாழ்த்தாது சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடம் பேச்சு நடத்தி, சுமூக தீர்வுகாண வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளிலும் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(Voice Byte — செந்தாமரை கண்ணன் - 47 Sec.)*

<<<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் மரவள்ளி கிழங்கு கண்காட்சியை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று பார்வையிட்டார்.

---------------

மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் சம்பா, தாளடி நெற்பயிர்களுக்கு நாளை மறுநாளுக்குள் காப்பீடு செய்ய வேண்டும் என ஆட்சியர் திரு ஸ்ரீகாந்த் அறிவுறுத்தியுள்ளார்.

----------------

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து, ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுயஉதவிக்குழுவினர் கோலங்கள் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

--------------

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு கமல் கிஷோர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

வேலூரில் குழந்தை திருமணம் தடுப்பு குறித்த விழப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தொடங்கிவைத்தார்.

----------------

கோவை கொடிசியா வளாகத்தில் பாதுகாப்பு தளவாட உற்பத்தி குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு இன்று தொடங்கியது.

------------------

மதுரை — காச்சிக்குடா, கன்னியாகுமரி — ஹைதராபாத், திருவண்ணாமலை — நரசப்பூர் இடையிலான சிறப்பு ரயில் சேவை அடுத்த மாதம் வரை நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

---------------------

தென்காசி காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் —

அமெரிக்காவின் **Reese Stalder** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **5-7, 6-1, 10-6** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Kosuke Ogura — Leo Vithoontien** இணையை வென்றது.

------------

கத்தார் சர்வதேச ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனுபமா ராமச்சந்திரன் பட்டம் வென்றார்.

--------------

மகளிர் உலக்கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினர், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை இன்று தில்லியில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

<<<<<<<<**END**>>>>>>>